கடந்த ஆண்டு 500 தடுப்பணைகள்! இந்த ஆண்டு முதல்வர் அனுமதி பெற்று

# தமிழ்நாட்டில் மேலும் 1000 தடுப்பணைகள் கட்ட நடவடிக்கை!

## சட்டப்பேரவையில் – நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் அறிவிப்பு!



**சென்னை, டிச. 11 -**

**சட்டப்பேரவையில் நேற்று கேள்வி நேரத்தின்போது நடைபெற்ற விவாதத்திற்கு பதிலளித்த நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள், "கடந்த ஆண்டு தமிழ்நாட்டில் 500 தடுப்பணைகள் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது போல, முதல்வர் அனுமதி பெற்று இந்த ஆண்டு 1000 தடுப்பணைகள் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்" என்று அறிவித்தார்.**

சட்டப்பேரவையில் நேற்று கேள்வி நேரத்தின்போது, இது குறித்து நடைபெற்ற விவாதம் வருமாறு:

**இரா. காமராஜ்:** பேரவைத் தலைவர் அவர்களே, திருவாரூர் மாவட்டத்தில், காவிரி பாசன பகுதி மற்றும் வெண்ணாறு, வெட்டாறு பாசனப் பகுதிகளில் ஆறுகளைவிட, பாசன வாய்க்கால்கள் மேடாகிக் கொண்டிருக்கின்றன. எனவே, குறைவான தண்ணீர் ஆறுகளில் வருகிறபோது, வாய்க்கால்களில் சரியாக ஏறிச் செல்வது கிடையாது. எனவே, இந்தக் குறையைப் போக்குவதற்கு வாய்க்கால்கள் தூர்வாரப்பட வேண்டும்.

இல்லையென்று சொன்னால் தேவைக்கேற்ப தடுப்பணைகள் கட்டித்தரவேண்டும். இதனை அரசு செய்வதற்கு முன்வருமா?

**நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன்:** உறுப்பினர்கள் இப்போது கேட்பதெல்லாம் dam பற்றியதல்ல, தடுப்பணைகளைப் பற்றியதுதான். ஆனால் அதுதான் சரியாகக்கூட இருக்கிறது. எனவே, இதுவரையில் 500 தடுப்பணைகள் கட்டுவதற்குரிய நடவடிக்கைகளை எடுத்திருக்கிறோம். இந்த ஆண்டு முதலமைச்சர் அவர்களிடத்தில் மறுபடியும் கேட்டிருக்கிறேன். சுமார் ஆயிரம் தடுப்பணைகளை வருகின்ற ஆண்டில் கட்டுவதற்கு அனுமதி கொடுத்தால் கூடுமானவரையில் அனைத்து உறுப்பினர்களின் கோரிக்கைகளும் நிறைவேற்றப்படும். அதுதான் இன்றைக்கு நீர்வளத் துறையில் செய்யவேண்டிய ஒரு பெரிய திட்டமாக இருக்கிறது.

காரணம், தடுப்பணை கட்டுவதன்மூலம் அங்கே 4 அடி, 6 அடி தண்ணீர் தேங்க வாய்ப்பிருக்கிறது. தண்ணீர் நிற்பதால் கிட்டத்தட்ட ஒரு furlong, இரண்டு furlong தூரத்திற்கு தண்ணீர் வருடம் முழுவதும் நிற்கும். அதனால் நீராதாரம் கிடைக்கிறது. நீங்கள் மாயனூரில் பார்த்தால், ஒரு காலத்தில் நாங்கள் கட்டினோம். மாயனூர் அப்போது வறண்ட பகுதி. இப்போது வளமான பகுதியாக இருக்கிறது. என்னுடைய தொகுதியிலேயே ஒரு தடுப்பணை கட்டினேன். கட்டும்போது எல்லோரும் இது கட்டவேண்டாம் என்று சொன்னார்கள். இப்போது இந்த மழையில் தண்ணீர் தடுப்பணையில் நின்றது. எல்லா கிணற்றிலும் தண்ணீர் ஏறிவிட்டது. ஆகையினால் குடி தண்ணீரும் கிடைக்கிறது. விவசாயத்திற்கும் தண்ணீர் கிடைக்கிறது. ஆகவே, விவசாயத்திற்குத் தேவையானது இப்போது தடுப்பணைகள் தான். எனவே, உறுப்பினர் சொன்னதைப்போல அந்தத் தடுப்பணைகளைக் கட்டுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்போது, நிச்சயமாக உங்கள் கோரிக்கை ஏற்கப்படும். தூர்வாருவது என்பது நீங்கள் குறிப்பிட்ட அந்தக் கால்வாய்களை கவனத்தில் கொள்கிறேன். இந்த ஆண்டு தூர்வாருகிறபோது அதை இணைத்துக் கொள்ளலாம்.

**ஆ.தமிழரசி:** சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதிக்குட்பட்ட திருபுவனம் ஒன்றியத்தில் கிருதுமால் நதி பாசன விவசாயிகள் வைகை நதி அணைக்கட்டோடு பாசன விவசாயத்தைச் சேர்க்க வேண்டுமென்று நீண்டநாட்களாகக் கோரிக்கை வைத்து வருகிறார்கள். வைகை அணை ஆயக்கட்டில் முதல் பேரணை என்பது 46 கண்மாய்களை உள்ளடக்கியது. இந்த 46 கண்மாய்களில் 16 கண்மாய்கள் இன்றைக்குப் பயனற்றுப் போய்விட்டன. வீடுகளாக, கட்டடங்களாக எழுப்பப்பட்டு பயனற்றுப்போய் இருக்கின்றன. அந்த முதல் பேரணையைப்பொறுத்தவரை 27,528 பாசன விவசாயிகள் பயன்பெற்று வந்தனர். இதில் 9,234 ஏக்கர் இப்போது பயனற்று இருக்கிறது.

எங்களுடைய திருபுவனம், கிருதுமால் நதி பாசன விவசாயிகள் 5,338 ஏக்கர் விவசாயத்திற்கு நீரைக் கேட்கிறார்கள். வைகை ஆயக்கட்டில் சேர்க்கவேண்டுமென்று கேட்கிறார்கள். தாயுள்ளம் கொண்ட முதலமைச்சர் அவர்களும், கருணை உள்ளம் கொண்ட நீர்வளத் துறை அமைச்சர் அவர்களும், இந்த ஆயக்கட்டில் கிருதுமால் நதியை இணைக்க வேண்டுமென்று அன்போடு கேட்டு, திருபுவனம் வட்டத்திற்கு உட்பட்ட சருகனி ஆறு வரத்துக் கால்வாய் 12 ஆண்டுகளுக்கு மேலாக தூர்வாரப்படாமல் இருக்கிறது. அதையும் தூர்வாரவேண்டு மென்று அன்போடு கேட்டுக்கொண்டு, கிருதுமால் நதியை வைகை ஆயக்கட்டில் சேர்க்கவேண்டுமென்ற கேட்டுக் கொள்கிறேன்.

**அமைச்சர் துரைமுருகன்:** உறுப்பினர் தொகுதியின்மீது உள்ள அக்கறை யால் நேற்றைக்கு 10, 20 நபர்களை அழைத்துக் கொண்டு வந்து, இதே கோரிக்கையை என் வீட்டில் வைத்தார்கள். அவர்களுக்கும், உறுப்பினருக்கும் விளக்கம் சொல்லி நான் அனுப்பினேன். அதே பதில் தான் இப்போதும் பொருந்தும்.

இவ்வாறு பேரவையில் விவாதம் நடைபெற்றது.



செங்கல்பட்டு மாவட்டத்தில் நடைபெற்ற பொதுமக்கள் மற்றும் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகளிடம் குறை கேட்பு கூட்டத்தில் கலந்துக்கொண்டு மனுக்களை பெற்று பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகளை குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் வழங்கினார். அருகில் மாவட்ட ஆட்சித் தலைவர் ச.அருண்ராஜ், நகரச் செயலாளர் ஜெ.சண்முகம், ஒன்றியச் செயலாளர் ஆப்பூர் சந்தானம், பேரூர் செயலாளர்கள் மு.தேவராஜ், ஜி.டி.யுவராஜ், உள்ளாட்சி பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் மற்றும் பலர் உள்ளனர்.

143 வது பிறந்தநாள்: மெரினா காமராஜர் சாலையில் உள்ள

# பாரதியாரின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவிப்பு!

## அமைச்சர் பெருமக்கள் மரியாதை செலுத்துகின்றனர்!

சென்னை, டிச.11

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் அரசின் சார்பில் மகாகவி பாரதியார் அவர்களின் 143-வது பிறந்த நாள் டிசம்பர், 11 இன்று அமைச்சர் பெருமக்கள், சென்னை மெரினா கடற்கரை காமராசர் சாலையில் உள்ள பாரதியாரின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்துகிறார்கள்

மகாகவி பாரதியார் அவர்களின் 143வது பிறந்த நாளை முன்னிட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் அரசின் சார்பில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், 11.12.2024 அன்று காலை 9.30 மணியளவில் சென்னை, மெரினா கடற்கரை, காமராஜர் சாலையில் அமைந்துள்ள அவர் திருவுருவச்சிலைக்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்துகிறார்கள்.

மகாகவி பாரதியார் 11.12.1882 அன்று தூத்துக்குடி மாவட்டம் எட்டயபுரத்தில் சின்னச்சாமி ஐயர் - இலட்சுமி அம்மாள் தம்பதியருக்கு மகனாக பிறந்தார். இவரது கவிப் புலமையைப் பாராட்டி எட்டயபுர மன்னர் இவருக்கு "பாரதி" என்று பட்டம் வழங்கினார். நவீன தமிழ்க் கவிஞர்களின் முன்னோடியாகவும், தமிழ் மொழியில் சிறந்த இலக்கியவாதியாகவும் திகழ்ந்த இவர், "மகாகவி" எனப் போற்றப்படுகிறார். தந்தை இறந்த பிறகு சில காலம் பாரதியார் காசியில் தம் அத்தை வீட்டில் வாழ்ந்தார்.

மகாகவி பாரதியார் தமிழ், இந்தி, சமஸ்கிருதம், ஆங்கிலம் உள்ளிட்ட பல மொழிகளில் புலமை பெற்று விளங்கினார். எனவேதான், "யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்" என்று தமிழின் பெருமையை உலகறியப் புகழ்ந்து பாடினார்.

மதுரை சேதுபதி பள்ளியில் தமிழாசிரியராகப் பணியாற்றினார். 1904 முதல் 1906 வரை "சுதேச மித்திரன்" பத்திரிகையில் பணியாற்றினார். 1907 ஆம் ஆண்டு, "இந்தியா" என்ற வார இதழையும், "பாலபாரதம்" என்ற ஆங்கில இதழையும் பொறுப்பேற்று நடத்தினார்.

"கண்ணன் பாட்டு", "குயில் பாட்டு", "பாஞ்சாலி சபதம்"போன்ற காவியங்களைப் படைத்தார். கீதையைத் தமிழில் மொழிபெயர்த்தார். மகாகவி பாரதியார் தமிழ்ப்பற்று, தெய்வப்பற்று, தேசப்பற்று, மானுடப்பற்று ஆகிய நான்கும் கலந்தவர். மகாகவி பாரதியார் மறைந்து நூறு ஆண்டுகள் ஆகியும், தமிழ்ச் சமுதாயத்திற்காக அவர் விட்டுச் சென்ற கவிதைகள், கட்டுரைகள், பாடல்கள் அனைத்தும் ஆயிரம் ஆண்டுகள் ஆனாலும் அவற்றைப் படிப்பவர் உள்ளத்தை ஈர்த்து உயிரோட்டமாய் உலவும்.

பேரறிஞர் அண்ணா அவர்கள், மகாகவி பாரதியார் அவர்களை, "மக்கள் கவி" என்று போற்றினார். மகாகவி பாரதியார் அவர்களின் பாடல்கள் மக்களிடையே சுதந்திரக் கனலை மூட்டியதால் ஆங்கிலேய அரசு அவரைக் கைது செய்ய முயன்றது. ஆனால், பாரதியார் ரயில் மூலம் தப்பி புதுச்சேரி சென்று வாழ்ந்தார். பின்னர், சென்னை திருவல்லிக்கேணியில் வாழ்ந்து 1921ஆம் ஆண்டு செப்டம்பர் 11ஆம் நாள் மறைந்தார். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் எட்டயபுரத்தில் பாரதியார் பிறந்த இல்லத்தைத் தமிழ்நாடு அரசின் சார்பில், 12.5.1973 அன்று அரசுடைமையாக்கி அதனை நினைவு இல்லமாக மேம்படுத்தி திறந்து வைத்தார்கள்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மகாகவி பாரதியாரின் நினைவுகளைப் போற்றும் வகையில் அவர் மறைந்த நூற்றாண்டின் நினைவாகச் செப்டம்பர் 11 ஆம் நாள் ஆண்டுதோறும் மகாகவி நாள் எனக் கடைப்பிடிக்கப்படும் என 10.9.2021 அன்று அறிவித்து நடைமுறை படுத்தியுள்ளார்கள். மேலும், அன்று 14 அறிவிப்புகளை வெளியிட்டார்கள். அவற்றுள் பாரதி இளம் கவிஞர் விருது, தேர்ந்தெடுக்கப்பட்ட பாடல்கள், கட்டுரைகளைப் புத்தகமாக வெளியிடுதல், காசியில் அவர் வாழ்ந்த வீடு அரசின் சார்பில் பராமரிக்கப்பட நிதியுதவி வழங்குதல், பாரதியார் படைப்புகளை நாடகங்களாகவும், குறும்படங்களாகவும் வெளியிடுதல் முதலியவை குறிப்பிடத்தக்கவையாகும்.

மகாகவி பாரதியார் பிறந்த நாளான, டிசம்பர் 11ஆம் நாள் ஆண்டுதோறும் அரசு விழாவாகத் தமிழ்நாடு அரசின் சார்பில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. இந்த ஆண்டின் மகாகவி பாரதியார் பிறந்த நாளான 11.12.2024 புதன்கிழமையன்று காலை 9.30 மணியளவில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் அரசின் சார்பில் சென்னை, மெரினா கடற்கரை, காமராஜர் சாலையில் உள்ள பாரதியார் சிலைக்கு அமைச்சர் பெருமக்கள் மாலை அணிவித்து, மலர்கள் தூவி மரியாதை செலுத்துகிறார்கள். இந்நிகழ்ச்சியில் மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், துணை மேயர், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டு சிறப்பிப்பார்கள்.



சென்னை தெற்கு மாவட்டம் சைதை மேற்கு பகுதி தி.மு.க. சார்பில் தமிழக துணை முதலமைச்சர் உதயநிதியின் உதயநாளை முன்னிட்டு பகுதி துணைசெயலாளர் ஆர்.ரமேஷ் தலைமையிலும், பகுதி செயலாளர் எம்.கிருஷ்ணமூர்த்தி எம்.சி., முன்னிலையில், சைதாப்பேட்டை, கோதாமேடு, அம்பேத்கர் திடலில் கற்பக விநாயகா மருத்துவ கல்லூரி மருத்துவமனை நடத்திய மாபெரும் மருத்துவமுகாமினை மருத்துவம் மற்றும் மக்கள்நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தொடக்கிவைத்தார். இந்நிகழ்வில் பொதுக்குழு உறுப்பினர் வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன், பகுதிகழக நிர்வாகிகள் களக்காடிஎல்லப்பன், த.சம்பத், ஆர்.ரமேஷ், கவிதாகவுதமன், வி.பி.ஜானகிராமன், வட்டகழக செயலாளர்கள் சை.மு.சேகர், அட்கோகமலநாதன், ந.தமிழரசு, எஸ்.பி.கோதண்டம், எம்.நாகா, மாவட்ட அமைப்பாளர்கள் சைதைசாதிக், எம்.எஸ்.ஹரிபாபு, ஆர்.கிருஷ்ணகுமார், நா.மணிகண்டன் உள்ளிட்ட கழக தோழர்கள் கலந்துகொண்டனர்.

ஒரு கவுன்சிலர் பொறுப்புக்கூட இல்லாமல் 'ஆட்சியில் பங்கு' என்பதுதான் இறுமாப்பு!

# மக்களோடு பயணிக்கும் எங்களுக்கு இறுமாப்பு தேவையில்லை!

## சென்னை கிழக்கு மாவட்டத்தில் நடைபெற்ற கூட்டத்தில் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பேச்சு!

சென்னை, டிச.11-

ஒரு கவுன்சிலர் பொறுப்புக் கூட இல்லாமல் ஆட்சியில் பங்கு தருவேன் என்று புதிதாக கட்சி தொடங்கியுள்ள நடிகர் விஜய் பேசுவதுதான் இறுமாப்பு. மக்களோடு மக்களுக்காக பயணிக்கும் எங்களுக்கு இறுமாப்பு தேவையில்லை என சென்னை கிழக்கு மாவட்டத்தில் நடைபெற்ற கூட்டத்தில் பேசிய அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி குறிப்பிட்டார்.

சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் திமுக இளைஞரணி செயலாளர் துணை முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாளையொட்டி நடைபெற்ற நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, அமைச்சர் பெருமக்கள் பி.கே.சேகர்பாபு, ரா. ராஜேந்திரன் ஆகியோருடன் கலந்து கொண்டார். சென்னை பாரிமுனையில் உள்ள ராஜா அண்ணாமலை மன்றத்தில் இந்த நிகழ்ச்சி நடைபெற்றது.

விழாவில் சென்னை துறைமுகம் தொகுதியில் இயங்கும் அன்னை தயாளு அம்மாள் தையல் பயிற்சி மையத்தில் பயிற்சி பெற்ற சுமார் 100 மகளிருக்கு இலவச தையல் எந்திரம் & சான்றிதழ் வழங்கினார்கள். மேலும், கணினி பயிற்சியகத்தில் டேலி படிப்பை நிறைவு செய்த சுமார் 100 மாணவர்களுக்கு இலவசமாக மடிக்கணினி & சான்றிதழ் வழங்கி வாழ்த்தினார்கள். இதில் மேயர் பிரியா, மண்டலக் குழுத் தலைவர் ஸ்ரீராமலு, சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. நிர்வாகிகள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

இந்நிகழ்வில் அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி ஆற்றிய உரை வருமாறு:

நீங்கள் மாநாடு நடத்திய மாவட்டம் கனமழையால் தத்தளித்துக் கொண்டிருந்தது. உங்களுக்கு மாநாடு நடத்துவதற்காக இடம் கொடுத்த மக்கள் கனமழையால் பாதிக்கப்பட்டு இருந்தார்கள்.

அப்போது நீங்கள் சம்பிரதாயத்திற்காக அறிக்கை வெளியிட்டீர்கள். சம்பிரதாயத்திற்காக புகைப்படம் எடுத்துக் கொண்டீர்கள். சம்பிரதாயத்திற்காக சமூக வலைதளத்தில் பதிவிட்டீர்கள்! நீங்கள் எங்களைப் பார்த்து கேள்வி கேட்க என்ன தகுதி இருக்கிறது?

இந்தியாவின் நம்பர் 1 முதலமைச்சர் என்று நமது முரசொலி சொல்லவில்லை... தினகரன் சொல்லவில்லை... தமிழ்நாட்டின் எந்தப் பத்திரிகையும் சொல்லவில்லை... வடநாட்டு பத்திரிகை சொல்லியுள்ளது.

இந்தியாவின் ஆளுமை மிக்க தலைவர் என்று நாம் சொல்லவில்லை. வடநாட்டு பத்திரிகைதான் சொல்லி உள்ளது.

இயற்கை பேரிடர் என்று வரும்போது துணை முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு முழுவதும் சென்று ஆய்வு மேற்கொள்கிறார். மக்களைச் சந்திக்கிறார். இரண்டு நாட்களில் 2500 கி.மீ பயணம் செய்துள்ளார்.

நீங்கள் களத்தில் இன்னும் இறங்கவில்லை. சமூக வலைதளத்தில் மட்டும் ரீல்ஸ் பதிவிட்டுக் கொண்டிருக்கிறீர்கள். ஆனால் நாங்கள் களத்தில் இறங்கி பணிபுரியும் தொண்டர்களைப் பெற்றிருக்கின்றோம்! ஒரு கவுன்சிலர் பொறுப்பை கூட இன்னும் பெறாமல் ஆட்சி அதிகாரத்தில் பங்கு தருகிறேன் என்று சொல்வது இறுமாப்பா? இல்லை... மக்களோடு மக்களாக மக்களுக்காக பணி புரியும் நாங்கள் இறுமாப்போடு செயல்படுகிறோமா? எங்களுக்கு இறுமாப்பு தேவையில்லை. மக்களின் பேராதரவோடு பயணிக்கிறோம்.

டயலாக் பேசுகிறீர்கள். ஸ்டண்ட் அடிக்கிறீர்கள். கடந்த பேரிடரின் போது தமிழ்நாடு அரசு கேட்ட 37,000 கோடி நிதியை தராத ஒன்றிய அரசை எதிர்த்து மேடை போட்டு பேசி உள்ளீர்களா?

கீழ்த்தரமான விமர்சனங்களை எல்லாம் கடந்து ஒரு வீரன் முன்னே சென்று கொண்டிருக்கிறான். அவரின் பின்னால் அவரின் மீது நம்பிக்கை வைத்து தமிழ்நாட்டை காப்பாற்றப் போகும் தலைவன் மீது நம்பிக்கை வைத்து நாம் பின்னே சென்று கொண்டிருக்கிறோம். அவர்தான் உதயநிதி ஸ்டாலின்.

இவ்வாறு அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பேசினார்.



சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. இளைஞரணி சார்பில் மனிதநேய உதயநாளை முன்னிட்டு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு முன்னிலையில் அ.ஆனந்த் தலைமையில் அன்னை தயாளு அம்மாள் பயிற்சி பள்ளியில் தையற் பயிற்சி முடித்த 176 பெண்களுக்கு தையல் இயந்திரம்,TALLY பயிற்சி முடித்த 84 மாணவர்களுக்கு மடிக்கணினியும் சுற்றுலாத்துறை அமைச்சர் சேலம் ஆர்.ராஜேந்திரன், பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி ஆகியோர் வழங்கி மாணவர்களோடு புகைப்படம் எடுத்துக்கொண்டு மகிழ்ந்தனர். உடன் சென்னை மாநகர மேயர் பிரியா ராஜன், இளைஞர் அணி பகுதி துணை அமைப்பாளர் அ.ஆனந்தன் உடனிருந்தனர்.